பள்ளிக்கு ஒரு பாதுகாப்புச் சுவரும் கட்டிக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரைக்கும், அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெக. வீரபாண்டியன். *(குறுக்கீடு)* முடித்துவிடுங்கள்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெக. வீரபாண்டியன், கொஞ்சம் இருங்கள்.

7. அறிவிப்புகள்

(அ) கென்யா நாட்டுக் குழு ஒன்று பேரவை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கென்யா நாட்டின் அரசுசாரா அமைப்பைச் சேர்ந்த குழு ஒன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காகத் தமிழகம் வந்துள்ளனர். அக்குழுவினர் தற்போது பேரவையிலுள்ள பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், உறுப்பினர்கள் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் அவர்களை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

முற்பகல் 11–40

I am pleased to inform that an NGO team from Kenya has come to Tamil Nadu to acquaint themselves about the programmes implemented by the Honourable Chief Minister of Tamil Nadu. They are now watching the proceedings of the Assembly from the VIP galleries. On behalf of the Honourable Chief Minister, Members of the Legislative Assembly and people of Tamil Nadu, I extend my hearty welcome to them. *(மேசையைத் தட்டும் ஒலி)* திரு. ஜெக. வீரபாண்டியன்.